# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 03.06.2026**
**(காணொளி காட்சி விசாரணை)**

முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-6322/A/2023**

திரு.s.**தெய்வகுமார்** -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,** -- பொது அதிகார அமைப்பு
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**குளத்தூர் வட்டம்,**
**புதுக்கோட்டை** மாவட்டம்.

# ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (03.06.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் / மேல்முறையீட்டாளர் | ரு.s.**தெய்வகுமார் ஆஜரானார்** |
| பொது அதிகார அமைப்பு | **திரு.சி.மணி**<br>**பொதுத்தகவல் அலுவலர் மற்றும்**<br>**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**<br>**வட்டாட்சியர் அலுவலகம், குளத்தூர் வட்டம்**<br>**அவர்கள் ஆஜரானார்.** |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 14.11.2022 |
| **மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம்**, 2005, **பிரிவு** 6(1)**இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில்**, provide the details of mobile contact number recorde in sale deeds of R/398/1/5942/2021 & R/398/1/5718/2021 **உட்பட 6 இனங்களில் தனக்கு தகவல் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.** | |
| சட்டப் பிரிவு 6(3)-**ன் கீழ்** மனு **மாற்றம் செய்த** நாள் | 29.11.2022 |
| பொது தகவல் அலுவலரின் பதில் | ----- |

| | |
|---|---|
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 20.02.2023 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | ----- |
| பிரிவு 19(3) **இரண்டாம்** மேல்முறையீட்டு மனு நாள் | 02.04.2023 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் **திரு.சி.மணி**, பொதுத் தகவல் அலுவலர் / **தலைமையிடத்து துணை வட்டாட்சியர், குளத்தூர் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ஓ.மு.**9183/2022/**ஆ**4, 27.12.2022 **நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.**

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், 14.11.2022 நாளிட்ட தனது மனுவிற்கு இதுநாள் வரை முழுமையான தகவல் அளிக்கவில்லை என்றும், உரிய தகவல்களை உரிய பொது அதிகார அமைப்பிடமிருந்து பெற்று வழங்குமாறும் ஆணையத்தைக் கோரினார்.

4. **இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என இவ்வாணையம் கருதுகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், ஆணையம் பின்வருமாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-**

- ***உரிய காலத்திற்குள் உரிய பொது அதிகார அமைப்பிற்கு மனுவினை மாற்றம் செய்யாமல் தவறான பொது அதிகார அமைப்பிற்கு மனுவினை மாற்றம் செய்த பொதுத் தகவல் அலுவலர் / துணை பதிவாளர், துணை பதிவாளர் அலுவலகம், திருச்சி அவர்கள் மீது தகவல் அறியும் உரிமை சட்டம், 2005, பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை 24.06.2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களில் இனம் 1 முதல் 4 வரையிலான தகவல்களை, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / துணை பதிவாளர், துணை பதிவாளர் அலுவலகம், திருச்சி மற்றும் இனம் 5 மற்றும் 6-க்கான தகவல்களை, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / தலைமை நில அளவையர், நில அளவைப் பிரிவு, குளத்தூர் தாலுக்கா ஆகியோர் "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர்கள் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து***

*இவ்வாணையத்திற்கு 24.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / துணை பதிவாளர், துணை பதிவாளர் அலுவலகம், திருச்சி, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / தலைமை நில அளவையர், நில அளவைப் பிரிவு, குளத்தூர் தாலுக்கா மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், குளத்தூர் தாலுக்கா ஆகியோருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.*

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA-6322/A/2023**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**குளத்தூர் வட்டம்.**
**புதுக்கோட்டை மாவட்டம் - 622 504.**

**மனுதாரர்**

திரு.s.**தெய்வகுமார்,**
**221, 6-வது வீதி,**
**ராகவேந்திரா ஹைவே பார்க்,**
**சமயபுரம்,**
**திருச்சிராப்பள்ளி - 621 112.**

Copy to file

KRM/PA 08.06.2026